

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.07.2026) சென்னை உத்தண்டியில் நடைபெற்ற முகமது அலி ஜின்னா – திருமதி யாஸ்மின் மலர் இணையரின் மகன் பீர் முகமது ஆரிப், பஷீர் முகமது – திருமதி தாஹிரா பானு ஆகியோரின் மகள் ஹலிமா தியானா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### தமிழ்நாட்டில் செயல்படுவது தமிழ்நாடு காவல் துறையா? த.வெ.க. காவல் துறையா?

# தி.மு.க. மனு மீது வழக்குப் பதிவு செய்ய என்ன தயக்கம்?

## முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, ஜூலை 4 -

ஊத்தங்கரை இளைய ராஜா த.வெ.க. எம்.எல்.ஏ. விடம் போலியான புகார் மனு பெற்று தி.மு.க.வின் மீது பழிவாங்க நடவடிக்கை ஈடுபடுவது நியாயமா? இதுபோல தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் புகார் மனு கொடுத்தால் நடவடிக்கை எடுப்பீர்களா? தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார் மனு மீது வழக்குப் பதிவு செய்ய என்ன தயக்கம்? தற்போது தமிழகத்தில் செயல்படுவது தமிழக காவல்துறையா அல்லது த.வெ.க. காவல்துறையா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

தேர்தல் முடிவுகள் மே மாதம் 4 ம் தேதி முடிவடைந்த இரவே தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை பனையூருக்கு அழைத்து வந்து த.வெ.க. கூட்டணியில் சேர்த்தவர் இன்றைய முதல்வர். தொடர்ந்து பா.ஜ.க. கூட்டணியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களில் 25 பேர்களை கட்சியை தகர்த்து தனக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தவர்.

அதேபோல அ.ம.மு.க. தலைமைக்கு தெரியாமல் காமராஜர் எம்.எல்.ஏ. கொள்முதல் செய்யப்பட்டு த.வெ.க.விற்கு ஆதரவாக வாக்களித்தார். இன்று வரை பல அ.தி.மு.கழக எம்.எல்.ஏ. க்கள் ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் முதல்வரை சந்தித்த பின் பத்திரிக்கையாளர் சந்திப்பில் “உங்களது 2 எம்.எல்.ஏ.க்களையும் ராஜினாமா செய்ய சொல்லுங்கள் இடைத்தேர்தலில் நானே பிரச்சாரம் செய்து வெற்றி பெறச் செய்வேன்” என்று வாக்குமூலம் தந்தார். அதனடிப்படையில் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை த.வெ.க. விற்கு ஆதரவாக ராஜினாமா செய்ய சொன்ன முதல்வர் மீது வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கும், லஞ்ச ஒழிப்பு துறைக்கும் தி.மு. கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் புகார் மனு கொடுத்துள்ளார்.



இத்தனை குற்றங்களையும் கைகட்டி வேடிக்கை பார்த்த தமிழக காவல் துறை ஊத்தங்கரை இளையராஜா எம்.எல்.ஏ.விடம் போலியான புகார் மனு பெற்று தி.மு.க.வின் மீது பழிவாங்கும் நடவடிக்கை ஈடுபடுவது நியாயமா? இதுபோல் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் புகார் மனு கொடுத்தால் நடவடிக்கை எடுப்பீர்களா? ஆர்.எஸ். பாரதி புகார் மனு மீது வழக்கு பதிவு செய்து செய்ய என்ன தயக்கம்? தற்போது தமிழகத்தில் செயல்படுவது தமிழக காவல்துறையா? அல்லது த.வெ.க. காவல்துறையா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலை தளத்தில் கூறியுள்ளார்.




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அமெரிக்கத் துணைத் தூதர் மரியானா எல்.நெய்ஷ்லர் அவர்கள் நேற்று முன்தினம் (2–7–2026) மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார். அதுபோது கழகத் தலைவர் அவர்கள், “The Dravidian Model” புத்தகத்தை வழங்கினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளார்.

### ஊழல் வழக்குகளில் சிக்கியவர்கள் த.வெ.க.வில் சேர்ப்பு!

# தொட்டவர்களை விட மாட்டேன் என்பது இதுதானா?

## முதல்வருக்கு அறப்போர் இயக்கம் கேள்வி!

சென்னை, ஜூலை 4 -

ஊழல் வழக்குகளில் தொடர்புடையவர்களை தவெகவில் சேர்த்து கொள்வதுதான், முதல்வர் விஜய் கூறிய, தொட்டவர்களை விட மாட்டேன் என்பதா என அறப்போர் இயக்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

C.விஜயபாஸ்கர் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த பொழுது மாதா மாதம் MDM குட்காவிடம் 14 லட்சம் ரூபாய் party fund வாங்கி, சி.பி.ஐ. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை ரூபாய் 35 கோடி அளவில் இவர் மீது வருமானத்துக்கு அதிகமான சொத்து குவித்துள்ளார் என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவருடைய நிலத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு கனிமவள கொள்ளை செய்துள்ளார் என்று வருமான வரித் துறை கண்டுபிடித்துள்ளதாக அறப்போர் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

சேகர் ரெட்டியின் SRS மைனிங் நிறுவனத்திடம் இருந்து மட்டும் விஜயபாஸ்கர் 85 கோடி பணம் பெற்றார் என்று வருமான வரித்துறை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் பணப்பட்டுவாடா சம்பந்தமான ஆவணங்கள் இவர் சம்பந்தமான இடத்தில் தான் பிடிபட்டது.

கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என்று அந்த தேர்தலில் ரத்து செய்யப்பட்ட அறிக்கைகளில் கூட இவர் தான் அதில் முக்கிய காரணியாக குறிப்பிடப்பட்டுள்ளார். தொட்டவர்களை விட மாட்டேன் என்பது இது தானா? என்று முதல்வர் விஜய்க்கு அறப்போர் இயக்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

### நீதிமன்றங்களில்

# அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு ரூ.30 லட்சம் லஞ்சம்!

## உயர்நீதிமன்றத்தில் த.வெ.க. வழக்கறிஞர் மனு!

சென்னை, ஜூலை 4-

30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு, அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டு வருவதாக த.வெ.க. வழக்கறிஞரே குற்றஞ்சாட்டி யிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியை சேர்ந்த த.வெ.க. வழக்கறிஞர் அணி இணை செயலாளர் ஞானசௌந்தரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பின் படி, அரசு வழக்கறிஞர் பணிக்கு விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி முடிவடையும் முன்பே நியமனப் பட்டியல் சமூக வலைதளங்களில் பரவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் மூலம், 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை லஞ்சம் பெற்று அரசு வழக்கறிஞர்கள் நியமனங்கள் நடைபெற்றதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

முதல்வர் விஜய், தனது ஆட்சியில் லஞ்சம், ஊழல், விதிமீறல் ஆகியவற்றை அனுமதிக்க மாட்டேன் என்று கூறிவரும் நிலையில், சட்டத்துறை செயலாளர், மாவட்ட ஆட்சியர், த.வெ.க. நிர்வாகிகள் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார். மேலும், அரசு வழக்கறிஞர் நியமன நடைமுறைக்கு இடைக்காலத் தடை விதிக்கவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 2026 ஜூன் மாதத்தில் 96.75 லட்சம் பயணிகள் பயணம்!

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தகவல்!

சென்னை, ஜூலை 4 -

2026 ஜூன் மாதத்தில் 96.75 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL) தகவல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் CMRL வெளியிட்டுள்ள அறிக்கையில்;

“சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில்பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 96,75,993 பயணிகள் மெட்ரோஇரயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக 24.06.2026 அன்று 3,77,208 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். 2026, ஜூன் மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 48,83,485 பயணிகள், க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி(Single Journey Paper QR 19,28,372; Online QR-1,27,795; Static QR 2,03,398; Whatsapp 4,29,255; Paytm 2,90,492; ONDC-12,13,854; PhonePe- 2,63,433; CMRL Mobile App(SVP) 80,224; Chennai One App - 2,46,608; Vijay Antony Music Concert Event QR-9,077) பயணிகளும் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், Digital SVP, க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு, Whatsapp (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்றபயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20% கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது. மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களில் வாங்கப்படும் ஒற்றைப்பயணத்துக்கான காகித QR பயணச்சீட்டுகளுக்கு (Single Journey Paper QR tickets) இந்தத் தள்ளு படிகிடையாது.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்புநல்கி வரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு முழுவதும் செயல்படும்

# டாஸ்மாக் பார்களை மூட உத்தரவு!

சென்னை, ஜூலை 4 –

தமிழ்நாட்டில் உரிம காலம் முடிவடைந்ததை அடுத்து, டாஸ்மாக் மதுபானக் கடைகளுடன் இணைந்து செயல்பட்டு வரும் பார்களை (மதுக்கூடங்கள்) மறு உத்தரவு வரும் வரை உடனடியாக மூட டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனம் மாநிலம் முழுவதும் மொத்தம் 4,765 மதுபானக் கடைகளை நடத்தி வருகிறது. இவற்றுள் சுமார் 2,400 கடைகளை ஒட்டி, தின்பண்டங்கள் மற்றும் குளிர்பானங்கள் விற்பனை செய்வதற்காக தனியாருக்கு ‘பார்’ நடத்த உரிமம் வழங்கப் பட்டு வருகிறது.

### குழப்பத்தில் உரிமையாளர்கள்!

இந்த பார்களுக்கான 2 ஆண்டு உரிம காலம் கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதமே முடிவடைய இருந்தது. எனினும், இடையில் தேர்தல் நடைமுறைகள் குறுக்கிட்டதால் புதிய டெண்டர் கோர முடியாமல் போனது. இதன் காரணமாக, பார்களின் அனுமதி காலம் கடந்த ஜூன் மாதம் வரை தற்காலிகமாக நீட்டிக்கப்பட்டது. அந்த அவகாசமும் ஜூன் 30ம் தேதியுடன் நிறைவடைந்தது.

புதிய டெண்டர் நடைமுறைகள் இன்னும் இறுதி செய்யப்படாததால், பார்கள் மூடப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, 2,000க்கும் மேற்பட்ட பார்களின் உரிம காலத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டித்து டாஸ்மாக் நிர்வாகம் தற்காலிக உத்தரவு பிறப்பித்துள்ளதாக நேற்று முன்தினம் காலையில்தான் தகவல் வெளியானது. இதன் மூலம் எவ்வித தடையுமின்றி பார்கள் தொடர்ந்து செயல்படும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், மதிய வேளையில் டாஸ்மாக் நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ள புதிய உத்தரவில், உரிமம் ஜூன் 30ஆம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் மறுஉத்தரவு வரும்வரை பார்களை உடனடியாக மூட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலையில் ‘3 மாத நீட்டிப்பு’ என்று தகவல் வெளியான நிலையில், சில மணி நேரங்களிலேயே ‘உடனடியாக மூட வேண்டும்) என டாஸ்மாக் நிர்வாகம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த திடீர் மாற்றத்தால் பார் உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் மதுப்பிரியர்கள் மத்தியில் மிகுந்த குழப்பமும் அதிர்ச்சியும் நிலவி வருகிறது.

# அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலை!

## ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் பாதிப்பு!

மதுராந்தகம். ஜூலை 4 -

வெள்ளபுத்தூர் அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலையால் மரக்கன்றுகள் சேதம் அடைந்து பாதிப்பு ஏற்படும் அவல நிலையில் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், வெள்ளபுத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு நாற்றங்கால் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள பசுமை நிழல் வலை பல இடங்களில் கிழிந்து சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக அங்கு வளர்க்கப்பட்டு வரும் பல்வேறு வகையான மரக்கன்றுகளின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது.

அரசின் பசுமைத் திட்டங்களுக்காகவும், பொது மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காகவும் இந்த நாற்றங்கால் பண்ணையில் மா, பலா, வேம்பு, புங்கன், தேக்கு, பூவரசு உள்ளிட்ட பல்வேறு ரகத்தில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், பசுமை நிழல் வலை நீண்ட நாட்களாக சேதமடைந்த நிலையிலேயே இருப்பதால், நேரடி வெயில், மழை மற்றும் பலத்த காற்றின் தாக்கத்தால் மரக்கன்றுகள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், கிழிந்துள்ள நிழல் வலை வழியாக பறவைகள் மற்றும் கால்நடைகள் நுழைந்து மரக்கன்றுகளுக்கு சேதம் விளைவிக்கும் அபாயமும் நிலவுகிறது. இதனால் அரசின் மரக்கன்று உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளும் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே, சேதமடைந்துள்ள பசுமை நிழல் வலையை உடனடியாக சீரமைத்து அல்லது புதிதாக அமைத்து, அரசு நாற்றங்கால் பண்ணையில் உள்ள மரக்கன்றுகளை பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### சாயப்பட்டறைகள் மூடப்பட்டதன் எதிரொலி :

# விசைத்தறி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்!

சங்கரன்கோவில், ஜூலை 4 -

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருக்கும் சாயப்பட்டறைகள் செயல்படாததால், விசைத்தறி தொழிலுக்கு தேவையான நூல் கிடைக்காமல் விசைத்தறி கூடங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளன.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான விசைத்தறி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். கடந்த சிலநாட்களுக்கு முன் சுற்றுசூழல் துறை அமைச்சரின் ஆய்வை தொடர்ந்து, உரிய அனுமதி இல்லாமல் இயங்கி வந்த சில சாய பட்டறைகள் மூடப்பட்டன.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மேற்கொண்ட நேரடி ஆய்வுக்குப் பிறகு, உரிய அரசு அனுமதி (CTE/CTO) இன்றி கழிவுநீரை வடிக்கால்களில் கலந்து வந்த 22 ஆலைகளுக்கு சீல் வைக்க உத்தரவிடப் பட்டது.

இந்த நிலையில், கழிவு நீர் சுத்திகரிப்பு பிரச்சினை காரணமாக தொழில் முடக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சங்கரன்கோவில், டி.என்.புதுக்குடி, புளியங்குடி மற்றும் சிந்தாமணி ஆகிய சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட விசைத்தறிகளும், 10,000க்கும் அதிகமான நெசவுத் தொழிலாளர்களும் நேரடியாகப் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

இதனை அடுத்து சாயப் பட்டறை கழிவுகளை சுத்திகரிக்கும் நிலையத்தை அரசு அமைத்து தர வேண்டும் என விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் விசைத்தறி கூடங்களின் உரிமையாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.



திருச்சி மாவட்டம் லால்குடியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் உரையாற்றினார். கழக செய்தி தொடர்பு குழு துணைத் தலைவர் மருது அழகுராஜ், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் எம்எல்ஏ சௌந்தர பாண்டியன், நகர் மன்ற தலைவர் துரை, பொருளாளர் துரைராஜ் உட்பட ஒன்றிய செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.